THE CENTER FOR JUSTICE & ACCOUNTABILITY
Bringing Human Rights Abusers To Justice.

### கேள்விகள் மற்றும் பதில்கள்: விக்கிரமதுங்க எதிர். ராஜபக்ஷ

**ஏன் முறைப்பாடொன்று பதியப்பட்டுள்ளது?**

அஹிம்சா விக்கிரமதுங்க அவருடைய தந்தையின் கொலைக்கான பொறுப்புக்கூறுதலை உறுதிசெய்வதற்கு கடந்த பத்து வருடங்களாக முயற்சித்து வருகின்றார். இலங்கையிலுள்ள விசாரணை அதிகாரிகள் கடினமாக உழைக்கின்றபோதிலும், இதுவரையில் லசந்தவின் கொலைக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எவ்வித குற்றச்சார்த்துகைகளும் பதியப்படவில்லை. இக்காரணங்களினால், அஹிம்சா மற்றும் நீதி மற்றும் பொறுப்புக்கூறுதலுக்கான நிலையமானது (The Centre for Justice and Accountability (CJA)) ஐக்கிய அமெரிக்காவில் இச்சிவில் வழக்கினைக் கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளனர். இச்சிவில் வழக்கானது எவ்வித சிறை தண்டனைகளுக்கும் வழிவகுக்காது என்றபோதிலும், இது தன்னுடைய தந்தையின் வழக்கினை ஒரு நீதிமன்றத்தில் கேட்கப்படச் செய்வதற்கு மற்றும் அவருடைய கொலைக்கான கோதாபய ராஜபக்ஷவின் பொறுப்புடைமையினை பக்கச்சார்பற்ற ஒரு நீதிபதியினூடாக ஸ்தாபிப்பதற்கு அஹிம்சாவிற்கு கிடைத்திருக்கின்ற ஒரு வாய்ப்பாகும்.

**முறைப்பாடு எங்கு பதியப்பட்டுள்ளது?**

கலிபோர்னியாவில் லொஸ் ஏஞ்சலிஸ் இல் உள்ள கலிபோர்னிய மத்திய மாவட்டத்திற்கான ஐக்கிய அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் இம்முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பிரதிவாதிக்கு வழக்கிற்கான பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளனவா?**

ஆம். இவ்வழக்கிற்கான பத்திரங்கள் 7 ஏப்ரல் 2019 அன்று மொன்ட்ரோஸ், கலிபோர்னியாவில் (லொஸ் ஏஞ்சல் மாவட்டத்தில்) வைத்து பிரதிவாதிக்கு வழங்கப்பட்டது. Ideal Investigations இல் உள்ள ஒரு தனிப்பட்ட விசாரணையாளரினால் Mintz Group இன் ஆதரவுடன் இவை ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டன.

**முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவை?**

ஊடகவியலாளரான லசந்த விக்கிரமதுங்கவின் நிதிமுறைக்கு புறம்பான கொலை மற்றும் ராஜபக்ஷ அரசாங்கத்தில் முக்கியமானதொன்றாகக் காணப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு எதிரான பரவலான மற்றும் திட்டமிடப்பட்ட அடக்குமுறை என்பனவற்றில் கோதாபய ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார் என முறைப்பாட்டில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**எவ்வெவ் சட்டங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன /அத்தகையதொரு முறைப்பாட்டிற்கான சட்டக்கட்டமைப்பு யாது?**

இவ்வழக்கானது Torture Victim Protection Act (சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டம்) மற்றும் Alien Tort Statute (வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டம்) போன்ற இரு கூட்டரசு நியதிச்சட்டங்களின்கீழ் சிவில் கோரிக்கைகளை கொண்டுவருகின்றது.

1991 இல் நிறைவேற்றப்பட்ட சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டமானது வெளிநாடொன்றின் உண்மையான அல்லது வெளிப்படையான அதிகாரத்தின்கீழ் செயற்படுகின்ற நபரொருவர் சித்திரவதை அல்லது நீதிக்கு புறம்பான கொலைகள் போன்ற குற்றங்களைப் புரிந்துள்ளபோது அவர்களுக்கெதிரான கோரிக்கைகளைக் கேட்பதற்கு ஐக்கிய

அமெரிக்க கூட்டரசு நீதிமன்றங்களை அனுமதிக்கின்றது. சித்திரவதையினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான சட்டத்தின்கீழ் ஐக்கிய அமெரிக்க பிரஜைகள் மற்றும் பிரஜைகளல்லாதோர் ஆகிய இருசாராரும் வழக்கு பதிவு செய்ய இயலும். குறிப்பிட்ட தனிநபர்மீது நீதிமன்றம் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதனால் வழக்கிற்கான பத்திரங்கள் குற்றவாளி ஐக்கிய அமெரிக்காவில் பிரசன்னமாகியிருக்கின்றபோதே வழங்கப்படுதல் வேண்டும்.

1789 இல் ஆக்கப்பட்ட வெளியாட்களுக்கு இழைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கான நியதிச்சட்டமானது, சர்வதேச மனித உரிமைகள் துஷ்பிரயோகங்களினால் பாதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டவர்கள் வழக்காற்று சர்வதேச சட்டத்தின் மீறல்கள் தொடர்பில் ஐக்கிய அமெரிக்க கூட்டரசு நீதிமன்றங்களில் குற்றவாளிகளுக்கெதிராக வழக்குத் தொடர்வதனை அனுமதிக்கின்றது. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, நீதிக்கு புறம்பான கொலைகள், யுத்த குற்றங்கள் மற்றும் ஏனைய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் ஆகியனவற்றுடன் தொடர்புறுகின்ற கோரிக்கைகளைக் கேட்பதற்கு ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்கள் இச்சட்டத்தினைப் பயன்படுத்துகின்றன.

இச்சட்டங்களில் எதுவும் வழக்குத் தொடர்வதற்கு ஐக்கிய அமெரிக்க பிரஜையாக இருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தவில்லை. எவ்வாறெனினும், ஒரு வழக்கு ஆரம்பிக்கப்படுவதற்கு பிரதிவாதி ஐக்கிய அமெரிக்காவின் நியாயாதிக்கத்திற்குள் காணப்பட வேண்டியது அவசியமாகும்.

**தற்போது பிரதிவாதியின் கடப்பாடு யாது?**

பிரதிவாதிக்கான பத்திரங்கள் வழங்கப்பட்டதிலிருந்து மூன்றுவார காலப்பகுதிக்குள் எங்களுடைய முறைப்பாட்டிற்கு பிரதவாதி பதிலளிக்க வேண்டும். அவர் ஒன்றில் நாங்கள் குற்றஞ்சாட்டியுள்ள நிகழ்வுகளை உறுதிப்படுத்தலாம் அல்லது மறுக்கலாம் அல்லது அதனைத் தள்ளுபடி செய்வதற்கான நகர்வுப் பத்திரமொன்றைப் பதிவு செய்யலாம். அவர் பதிலிறுக்காவிடினும்கூட, அவரின்றியே இவ்வழக்கினைத் தொடரமுடியுமென்பதுடன் நீதிமன்றமானது அவருக்கு எதிரான எங்களுடைய கோரிக்கைகளின் பலத்தினை மதிப்பீடு செய்யும்.

**அத்தகையதொரு வழக்கின் சட்ட செயன்முறை யாது?**

இவ்வழக்கு தொடர்பான பத்திரங்கள் கோதாபய ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ளன என்பதுடன் அவர் தற்போது இவ்வழக்கு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் இம்முறைப்பாட்டிற்கு பதிலிறுக்க வேண்டும் மற்றும் நீதிமன்றத்தில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு சட்டத்தரணியொருவரைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வழக்கு தொடரப்படுமாயின், இரு திறத்தவர்களுக்கும் சாட்சியங்களை அளிப்பதற்கு மற்றும் ஒருவரிடமிருந்தொருவர் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இறுதியாக, இவ்வழக்கு விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன்போது எமது கட்சிக்காரர், சாட்சிகள் மற்றும் நீதிமன்றத்திலுள்ள நிபுணர்கள் ஆகியோரின் சாட்சிகளினூடாக வாதி தன்னுடைய வழக்கினை நீதிபதி அல்லது ஜூரி ஒருவரின் முன்னிலையில் நிரூபிக்க வேண்டும்.

**குற்றவியல் தண்டனைகள் காணப்படுமா?**

முறைப்பாட்டிலுள்ள குற்றங்களுக்கு உண்மையில் கோதாபய ராஜபக்ஷ பொறுப்பானவர் என நீதிபதி அல்லது ஜூரி தீர்மானிப்பாராயின், இவ்வழக்கில் பணரீதியான நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு எய்தப்படும். குற்றவியல் வழக்கொன்றைப்போல, இதில் எவ்வித சிறைதண்டனையும் வழங்கப்படாது. எவ்வாறெனினும், எங்களுடைய வழக்கு வெற்றிகரமாக அமையுமாயின், அது இலங்கையில் குற்றவியல் விசாரணையொன்றை ஆரம்பிப்பதற்கு மற்றும் குற்றவியல் பொறுப்புடைமையை நோக்கி வழிநடத்துவதற்கு ஆதரவளிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

**இவ்வழக்கு இலங்கை நீதிமன்றங்களில் நீதி பெறப்படுதலைத் தடுக்குமா?**

இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கெதிரான தாக்குதல்களுக்கான நீதியான மற்றும் சுயாதீனமான வழக்குத்தொடுப்புக்களுக்கான தேவை தொடர்பில் நாம் எமது முழுமையான ஆதரவினை வழங்குகின்றோம். துரதிஷ்டவசமாக, அத்தகைய வழக்குகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அத்தகைய வழக்குத்தொடுப்புக்கள் இலங்கையில் சாத்தியமாகின்றபோது, எங்களுடைய வழக்கு அத்தகைய வழக்குகள் முன்னோக்கிச் செல்வதனைத் தடுக்காது. உண்மையில், லசந்த, கீத் நொயர் மற்றும் இடருக்குட்பட்ட ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலான தற்போதைய விசாரணைகள் மற்றும் எதிர்கால வழக்குத் தொடுப்புக்கள் என்பனவற்றிற்கு ஆதரவளிப்பதாக எம்முடைய வழக்கு அமைய வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியினை வழங்கியுள்ள இதனையொத்த வேறு வழக்குகள் ஐக்கிய அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ளனவா?**

உதாரணத்திற்கு பெயரிட வேண்டுமாக இருப்பின், பொஸ்னியா, சிலி, சீனா, எல் சல்வேடர் மற்றும் சோமாலியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கான நீதியினை கோரி பல வழக்குகளை CJA ஆனது ஐக்கிய அமெரிக்க நீதிமன்றங்களில் வெற்றிகரமாக கொண்டு வந்துள்ளது. கீழ்வரும் இரு வழக்குகளும் அண்மித்த வெற்றிக்கான உதாரணங்களாகும்:

- 2012 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க நீதிமன்றமானது சோமாலியாவின் முன்னாள் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சரான General Mohammed Ali Samantar என்பவருக்கெதிராக சோமாலியாவில் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 21 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. Samantar 1980 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற எண்ணற்ற கொலைகள் மற்றும் சிவிலியன்களின் சித்திரவதைக்கு பொறுப்புடையவராகக் காணப்பட்டார். இவ்வழக்கில் முதற் தடவையாக Siad Barré ஆட்சியில் இடம்பெற்ற மனித உரிமை தொடர்பான குற்றங்களுக்காக சோமாலிய அதிகாரி ஒருவர் மீது பொறுப்பு சுமத்தப்பட்டது. அத்துடன், வெளிநாட்டு அலுவலர்கள் சித்திரவதை, நீதிக்கு புறம்பான கொலைகள் அல்லது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விடுபாட்டுரிமையினை கோர முடியாது என்ற முற்தீர்ப்பு இதன்போது ஸ்தாபிக்கப்பட்டது.

- 2016 இல், சிலியின் பாடகரான Victor Jara என்பவருடைய கொலைக்கு Lieutenant Pedro Barrientos Nuñez என்பவரே பொறுப்பென ஜூரியொருவர் கண்டறிந்ததுடன் Jara இன் குடும்பத்திற்கு 21 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. சமூக சமத்துவம் என்ற செய்தியினை வெளிப்படுத்துவதில் பிரசித்தமாக விளங்கிய Jara 1973 இல் Pinochet ஆட்சியின்கீழ் இராணுவத்தினரால் நூற்றுக்கணக்கான ஏனைய நபர்களுடன் சேர்த்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இறுதியாக 2009 ஆம் ஆண்டு முன்னாள் இராணுவ வீரர்கள் தங்களுடைய மௌனத்தைக் கலைத்ததுடன் சிலியில் குறிப்பிட்ட எண்ணிக்கையான வீரர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டது. எவ்வாறெனினும், Barrientos ஐக்கிய அமெரிக்காவிற்கு வந்து விட்டமையினால், சிலியன் நீதிமன்றங்களால் அவரை அணுக முடியவில்லை. CJA இன் வழக்கின் தீர்மானம் மற்றும் சிலியில் இடம்பெற்ற வழக்குத்தொடுப்புக்கள் என்பன இணைந்து அவருடைய கொலையில் அரசாங்கத்தின் வகிபங்கிற்கான நீதிமுறை அங்கீகாரத்தை வழங்கியது.

**CJA என்பது யாது?**

நீதி மற்றும் பொறுப்புக்கூறுதலுக்கான நிலையமானது (The Centre for Justice and Accountability (CJA)) சென் பிரான்சிஸ்கோவினைத் தழுவிய மனித உரிமைகள் சட்ட ஒழுங்கமைப்பொன்றாகும் என்பதுடன் அது உலகம் முழுவதிலும் இடம்பெறுகின்ற சித்திரவதை, யுத்தக்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் ஏனைய பாரதூரமான மனித உரிமை துஷ்பிரயோகங்கள் என்பனவற்றை உலகளாவியரீதியில் பொறுப்புக்கூறுதல் வலைப்பின்னலைப் பலப்படுத்துகின்ற புத்தாக்க சட்டவாக்கங்கள், கொள்கைகள் மற்றும் நிலைமாறுகால நீதி உபாயங்களினூடாகத் தடுப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது. உண்மை, நீதி மற்றும் நிவாரணம் என்பனவற்றை அடைந்துகொள்ளும்பொருட்டு CJA ஆனது பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் எஞ்சியிருப்பவர்களுடன் இணைந்து பணியாற்றுவதுடன் அது சோமாலியாவில் Siad Barre இன் ஆட்சியின்போது பணியாற்றிய பாதுகாப்பு அமைச்சர், சிலியின் செயற்பாட்டாளரும் பாடகருமான Victor Jara என்பவரின் கொலைக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி மற்றும் யுத்த நிருபரான Marie Colvin இனுடைய இலக்கு வைக்கப்பட்ட கொலைக்காக சிரியாவின் Assad ஆட்சி என்போருக்கு எதிராக வெற்றிகரமாக வழக்குகளை கொண்டுவந்துள்ளது. www.cja.org இனைப் பார்க்க.